
# சிறுநீரகப் பராமரிப்பை மேம்படுத்துதல்:

## செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைகளில் சிறுநீரக சேவைகளுக்கான முன்மொழிவு



**சிறுநீரகப் பராமரிப்பை மேம்படுத்துதல்:**
Epsom and St Helier University Hospitals NHS Trust
Frimley Clinical Commissioning Group
NHS England & Improvement - Specialised Commissioning
South West London Clinical Commissioning Group
St George's University Hospitals NHS Foundation Trust
Surrey Heartlands Clinical Commissioning Group

# எங்கள் சிறுநீரக (ரீனல்) நோயாளிகளுக்கு சில பராமரிப்புகளை நாங்கள் வழங்குகின்ற வழிமுறை 2025 ஆம் ஆண்டிலிருந்து மாறக்கூடும்.

செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைகளில் பணிபுரிகின்ற சிறுநீரக மருத்துவர்களும் செவிலியர்களும் சிறுநீரகப் பராமரிப்பை மேம்படுத்துவதற்கான முன்மொழிவு ஒன்றைத் தயாரித்துள்ளார்கள். நீங்கள் அதைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொண்டு உங்கள் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும் என விரும்புகிறோம். இந்த துண்டுப்பிரசுரம் முன்மொழிவின் சுருக்கம் பற்றி விளக்கிக் கூறுகிறது.
உங்கள் கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் கவலைகளை நாங்கள் கேட்டறிவதற்காக இதில் ஒரு கேள்விப்பட்டியலும் இடம்பெற்றுள்ளது.
பின்வரும் வலைத்தளத்தில் கூடுதல் தகவல்களை நீங்கள் தெரிந்துகொள்ளலாம், மற்றும் ஆன்லைனில் கேள்விப்பட்டியலை நிரப்பலாம்.
**https://swlondonccg.nhs.uk/renal/**

1

# பின்னணி




2020 - சுட்டனில் புத்தம்புதிய சிறப்பு அவசர சிகிச்சை மருத்துவமனை கட்டுவதற்கு NHS அனுமதி பெற்ற திட்டங்கள்



2026 ஆம் ஆண்டிலிருந்து,அனைத்து சிறுநீரக உள்நோயாளி மற்றும் சிறப்புப் பராமரிப்புகளும் செயின்ட் ஹெலியர் மருத்துவமனையிலிருந்து புதிய மருத்துவமனைக்கு மாற்றப்படும்



அதற்குப் பதிலாக, இரண்டு மருத்துவமனைகளையும் சேர்ந்த சிறுநீரக நிபுணர்கள் தங்கள் சேவைகளை செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையின் புதிய பிரிவில் ஒன்றிணைக்க விரும்புகிறார்கள்



2020 - சுட்டனில் புத்தம்புதிய சிறப்பு அவசர சிகிச்சை மருத்துவமனை கட்டுவதற்கு NHS அனுமதி பெற்ற திட்டங்கள்




2026 ஆம் ஆண்டிலிருந்து,அனைத்து சிறுநீரக உள்நோயாளி மற்றும் சிறப்புப் பராமரிப்புகளும் செயின்ட் ஹெலியர் மருத்துவமனையிலிருந்து புதிய மருத்துவமனைக்கு மாற்றப்படும்

2026 ஆம் ஆண்டுக்குப் பின், எப்சம் மற்றும் செயின்ட் ஹெலியர் மருத்துவமனைகள் சிறுநீரக நோயாளிகளுக்கு உள்நோயாளி (ஒரிரவு) பராமரிப்பை வழங்காது. ஏனெனில் 2020 ஆம் ஆண்டில், சுட்டனில் £500m செலவில் புத்தம்புதிய சிறப்பு அவசர சிகிச்சை மருத்துவமனை கட்டுவதற்கு NHS அனுமதி பெற்றுள்ளது.

எப்சம் மற்றும் செயின்ட் ஹெலியர் மருத்துவமனைகளிலிருந்து ஆறு முக்கிய சேவைகள் புதிய மருத்துவமனைக்கு மாற்றப்படும். முக்கிய அவசர சிகிச்சைத் துறை; உயிர்காக்கும் சிகிச்சை; அவசரகால அறுவைச் சிகிச்சை; உடனடி மருந்து; சிறப்பு குழந்தைகள் பராமரிப்பு மற்றும்; பிரசவம் போன்றவை இந்தச் சேவைகளில் அடங்கும்.

இந்தத் திட்டங்களின் கீழ், செயின்ட் ஹெலியரின் உள்நோயாளி சிறுநீரக சேவையும் 2026 ஆம் ஆண்டில் சுட்டனுக்கு மாற்றப்படும். செயின்ட் ஹெலியரிலோ, அல்லது சர்ரே அல்லது தென்மேற்கு லண்டனில் உள்ள பிற சிகிச்சையகங்கள் அல்லது சிறுநீரகப் பிரிவுகளிலோ உள்ள சிறுநீரக வெளிநோயாளி சேவைகளில் எந்த மாற்றமும் இருக்காது.

2020 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிய கூடுதல் செய்திகளை நீங்கள் இங்கே படிக்கலாம்
**https://improvinghealthcaretogether.org.uk/**

2020 ஒன்றிணைந்து சுகாதார நலம்பேணலை மேம்படுத்துதல் ஆலோசனைக்கான தங்கள் பதிலில், செயின்ட் ஜார்ஜ் மற்றும் செயின்ட் ஹெலியர் மருத்துவமனையைச் சேர்ந்த சிறுநீரகத் தலைவர்கள் சிறுநீரகச் சேவைகளுக்காக ஒரு மாற்று முன்மொழிவை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பது:

“…புதிதாக நியமிக்கப்பட்ட மருத்துவத் தலைவர்களாக, அனைத்து சக்திகளையும் முறையாக ஒன்றிணைத்து எங்களது மூன்றாம் நிலை சிறுநீரக மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை முறைகளை ஒரு புதிய நோக்கத்திற்காக கட்டப்பட்ட மருத்துவமனையில் கிடைக்கச் செய்ய முடிந்தால் நாங்கள் வழங்குகின்ற கவனிப்பை மேம்படுத்துவதற்கான மாற்றத்தில் நாங்கள் மேலும் ஒரு படி முன்னேற முடியும் எனவும்…(மற்றும்) செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனை ஒருங்கிணைந்த சிறுநீரக சேவை பெறுவதற்காக ஒரு சரியான இடமாக இருக்கும் எனவும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.”

அவர்களின் முழு பதிலை இங்கே படிக்கலாம்
**https://improvinghealthcaretogether.org.uk/wp-content/uploads/2020/05/E.1.7-South-West-London-Renal-Community.pdf**

2

# புதிய முன்மொழிவு

செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைகளில் உள்ள சிறுநீரக மருத்துவர்கள் ஒரு புதிய முன்மொழிவை சமர்ப்பித்துள்ளனர். இரண்டு மருத்துவமனைகளில் உள்நோயாளி சிறுநீரகப் பராமரிப்பை தொடர்வதற்குப் பதிலாக, **செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் £80m செலவில் கட்டப்படுகின்ற புதிய பிரிவில் ஒரே இடத்தில் ஒன்றிணைந்து**.

சிறுநீரக நோயாளிகளுக்கு உள்நோயாளி பராமரிப்பு தேவைப்படும் எல்லா நேரங்களிலும் வழங்கப்படும் பராமரிப்பை மேம்படுத்துவதற்கு சிறுநீரக மருத்துவர்கள் இந்தப் புதிய முன்மொழிவை சமர்ப்பித்துள்ளனர்.

செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனை சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைக்கான ஒரு முன்னணி மையமாக நன்கு நிலைநாட்டப்பட்டுள்ளது . இது செயின்ட் ஹெலியர் மருத்துவமனை நோயாளிகளுக்கும், தென்மேற்கு லண்டன், சர்ரே மற்றும் சசெக்ஸ் பகுதியைச் சேர்ந்த பிற நோயாளிகளுக்கும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மையமாக விளங்குகிறது.

சிறுநீரக நோயாளிகளுக்கு **உள்நோயாளி (ஒரிரவு) பராமரிப்பு** தேவைப்படும்போது இந்த முன்மொழிவில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும்.


எதிர்காலத்தில் சுட்டனில் உள்ள புதிய மருத்துவமனைக்குச் செல்வதற்குப் பதிலாக, **நோயாளிகள் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மற்றும் வாஸ்குலார் அணுகல் அறுவைச் சிகிச்சை அல்லது கடுமையான சிறுநீரக காயம் ஆகியவற்றுக்கான சிகிச்சைகளுக்கு டூட்டிங் பகுதியில் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் £80m செலவில் புதிதாகக் கட்டப்பட இருக்கின்ற சிறுநீரக பிரிவுக்குச் செல்வார்கள்.**

சிறிய எண்ணிக்கையிலான வெளிநோயாளி நியமனச் சந்திப்புகளும் செயின்ட் ஜார்ஜின் புதிய பிரிவுக்கு மாற்றப்படும். உதாரணமாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு கூடுதல் ஆதரவும் ஆலோசனையும் தேவைப்படுகின்ற நோயாளிகள் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைக்குச் செல்வார்கள் என்பதே இதன் பொருள். வீட்டில் டயாலிசிஸ் செய்வதற்கான பயிற்சி போன்ற சில வெளிநோயாளி நியமனச் சந்திப்புகள் செயின்ட் ஜார்ஜிலிருந்து செயின்ட் ஹெலியர் மருத்துவமனைக்கு மாற்றப்படும்.


மற்ற அனைத்து சிறுநீரக சேவைகளிலும் எந்த மாற்றமும் இருக்காது. உதாரணமாக, நீங்கள் உங்கள் சிறுநீரக சிகிச்சைக்கு சமுதாயத்திற்குள் ஆதரவு பெறுபவராக இருந்தால், இது தொடரும். அதாவது, **சிறுநீரக சேவைகளுடன் நோயாளியின் 95 சதவீத தொடர்புகள் அப்படியே இருக்கும் என்பதையே இது குறிக்கிறது. உள்ளூர் மருத்துவமனைகள்,பிரிவுகள் அல்லது வீடுகளில் தற்போது நடைபெற்று வரும் டயாலிசிஸ் சேவைகள் மற்றும் சிறுநீரக சிகிச்சையகங்களில் எந்த மாற்றங்களும் இருக்காது**.

புதிய சிறுநீரக பிரிவுக்கான £80m நிதியுதவி NHS-ஆல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

முன்மொழிவுகளில் COVID-19 தொற்றின் தாக்கமும் கருத்தில் கொள்ளப்படும். சிறுநீரக நோயாளிகள் எளிதில் நோய்த்தொற்றுக்கு இலக்காவார்கள் எனக் கருதப்படுவதால் இது மிகவும் முக்கியமாகும். புதிய பிரிவு எதிர்காலத்தில் ஏற்படும் எந்தவொரு பெருந்தொற்றுக் காலத்திலும் பாதுகாப்பான சேவைகளை வழங்கும் விதமாக வடிவமைக்கப்படும். நோய்த்தொற்றுக் கட்டுப்பாடு மற்றும் சமூக இடைவெளி ஆகியவற்றை புதிய கட்டிடங்களில் எளிதாக நடைமுறைப்படுத்த முடியும்.




சிறுநீரக நோயாளிகளுக்கு கூடுதல் பராமரிப்பு தேவைப்படும்போது அவர்களுக்கு செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் உள்ள புதிய பிரிவில் சிகிச்சையளிக்க வேண்டும் என்பதை சிறுநீரக நிபுணர்கள் உறுதிசெய்ய விரும்புகிறார்கள்.




புதியபிரிவானது, ஓரிரவு தங்க வேண்டியிருக்கும் நோயாளிகளுக்கும், கூடுதலான ஆதரவு, ஆலோசனை மற்றும் பயிற்சி தேவைப்படுகின்ற வெளிநோயாளிகளுக்கும் ஏற்றதாக இருக்கும்.




இந்தப் பிரிவு சிறுநீரக நோயாளிகளுக்கு கூடுதல் பராமரிப்பும் சிறப்பு சிகிச்சையும் தேவைப்படும்போது அதற்கான சமமான அணுகலை அவர்கள் பெறுவதற்கு வழிவகுக்கும்



£80m செலவில் புதிய பிரிவு செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும்



சில நோயாளிகள் கூடுதல் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும்



மருத்துவமனையில் தற்போது இருக்கும் மையங்கள் அல்லது டயாலிசிஸ் மெஷின்களில் எந்த மாற்றமும் இருக்காது



செயின்ட் ஜார்ஜ் மற்றும் செயின்ட் ஹெலியர் சிறுநீரகக் குழுக்கள் இந்த மாற்றம் நோயாளிகளுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

இந்தப் புதிய பிரிவு சிறுநீரக சேவைகளில் இருந்து நோயாளிகள் பெறும் சிகிச்சை மற்றும் பராமரிப்பிற்கு

**5%**

பங்களிக்கும்

சிறுநீரக சேவைகளுடன் நோயாளிகளுக்கு இருக்கும் தொடர்புகளில்

**95%**

அப்படியே இருக்கும்

3

# எந்த சிறுநீரக நோயாளிகள் தங்கள் பராமரிப்பில் மாற்றத்தைக் காண்பார்கள்?

இந்த முன்மொழிவுகள் சிறுநீரக நோயாளிகளின் சேவையில் சிகிச்சை மற்றும் பராமரிப்பில் சிறிதளவு மட்டுமே பாதிக்கும். உள்ளூர் மருத்துவமனை சிகிச்சையகங்கள், டயாலிசிஸ் யூனிட்களில் மேற்கொள்ளப்படும் வெளிநோயாளி சிகிச்சைகளில் அல்லது வீடுகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளில் எந்த மாற்றமும் இருக்காது.

**எந்த மாற்றமும் இல்லை**

சிறுநீரக சேவைகளிலிருந்து நோயாளிகள் பெறும் சிகிச்சை மற்றும் பராமரிப்பில்

**95%** சிகிச்சைகள் உள்ளூர் சிறுநீரக சிகிச்சையகங்கள், சிறுநீரகப் பிரிவுகள் அல்லது வீட்டில் அளிக்கப்படும்

சிறுநீரக சேவைகளிலிருந்து நோயாளிகள் பெறும் சிகிச்சை மற்றும் பராமரிப்பில்

**5%** செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் உள்ள புதிய பிரிவில்

நீங்கள் காண்பது போல, சிறுநீரக நோயாளிகளுக்கும் சிறுநீரக சேவைக்கும் இடையிலான பெரும்பாலான தொடர்புகள் மாறாமல் அப்படியே இருக்கும். கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் அதிக விவரங்களைத் தெரிவிக்கிறது.

**10**

மருத்துவமனைகளில் பொது சிறுநீரகவியல், மூன்று மாத சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பின்தொடர் பெரிடோனியல் டயாலிசிஸ் (PD), இரும்புச்சத்து நிர்வாகம், அறுவைச் சிகிச்சை மதிப்பீடு மற்றும் வாழும் கொடையாளர் சிகிச்சையகங்கள் உள்ளிட்ட மேம்பட்ட சிறுநீரகப் பராமரிப்பு ஆகியவை தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

**8**

பிரிவுகள் தொடர்ந்து டயாலிசிஸ் சேவையை வழங்குகின்றன

வீட்டு சிகிச்சைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்

**உள் நோயாளிகள்**

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மற்றும் வாஸ்குலர் அறுவை சிகிச்சை, கடுமையான சிறுநீரக காயம்

**வெளிப்புற நோயாளிகள்**

டயாலிசிஸ் பராமரிப்பின் ஆரம்ப கட்டங்களில் கூடுதல் ஆதரவு மற்றும் வீட்டு சிகிச்சையை ஆதரிக்க கூடுதல் ஆலோசனை மற்றும் பயிற்சியின்

4

# சிறுநீரக நோயாளிகளுக்கு இது ஏன் சிறந்தது?

புதிய பிரிவில் பெரிய குழுவாகப் பணிபுரிவது நோயாளிகளுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும், பராமரிப்பாளர்களுக்கும் சிறப்பான பலனைத் தரும் என எங்கள் சிறுநீரக மருத்துவர்களும் செவிலியர்களும் சொல்கிறார்கள். மேலும் இது ஊழியர்களுக்கும், ஆட்சேர்ப்பில் உதவுவதற்கும், சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட மருத்துவர்களையும் செவிலியர்களையும், சுக சுகாதார வல்லுநர்களையும் தக்கவைப்பதற்கும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், ஆராய்ச்சிப் பரிசோதனைகளில் பங்கேற்பதற்கும், தங்கள் பராமரிப்பையும் சிகிச்சையையும் மேம்படுத்த உதவுவதற்கும் நோயாளிகளுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும்.

நோயாளிகளுக்கான பராமரிப்பை முன்மொழிவு எவ்வாறு மேம்படுத்தும் என்பதற்கான சில உதாரணங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணங்கள் நோயாளிகளுக்கான மூன்று உண்மையான 'பாத்வேக்களை' பயன்படுத்துகின்றன. பாத்வே என்பது ஒரு குறிப்பிட்ட பராமரிப்புக் காலத்தில் நோயாளியின் பயணத்தை விவரிப்பதற்கு NHS பயன்படுத்துகின்ற ஒரு வார்த்தை ஆகும். பாத்வே ஆனது நோயாளிகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் முடிந்த அளவுக்கு உளைச்சல் இல்லாததாகவும், பாதுகாப்பானதாகவும், விரைவானதாகவும் இருக்க வேண்டும்.

> உள்ளூர் சிறுநீரக நோயாளிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்கமாக, சிறுநீரகப் பராமரிப்பை மேம்படுத்த மருத்துவக் குழுவின் இந்த முன்மொழிவிற்கு ஆதரவளிக்கிறோம்

**செயின்ட் ஜார்ஜ் சிறுநீரக நோயாளிகள் சங்கத்தின் தலைவர்**
**செயின்ட் ஹெலியர் சிறுநீரக நோயாளிகள் சங்கத்தின் தலைவர்**

# உதாரணம் 1

## மருத்துவமனைகளுக்கிடையே நோயாளிகளை மாற்றுதல்

செயின்ட் ஹெலியர் மருத்துவமனையிலுள்ள உள்நோயாளிகளுக்கு பெரும்பாலும் ஒரு சிறப்பு மருத்துவரிடமிருந்து ஆலோசனை அல்லது பராமரிப்பு தேவைப்படுகிறது.

உதாரணமாக, அவர்கள் ஒரு இதய (கார்டியாக்) நிபுணரைப் பார்க்க வேண்டியிருக்கலாம். செயின்ட் ஹெலியர் சிறுநீரக யூனிட்டில் இதய நிபுணர் எல்லா நேரங்களிலும் இருப்பார். அதாவது, நோயாளி அதற்காக செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் படுக்கைக்காக காத்திருக்க வேண்டியதில்லை அல்லது அவரை அங்கு மாற்ற வேண்டியதில்லை. இதற்காக பல நாள்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம். அதன் பிறகு தங்களுடைய எஞ்சிய சிகிச்சையைத் தொடர்வதற்காக நோயாளி செயின்ட் ஹெலியர் மருத்துவமனைக்கு திரும்பவும் வரவேண்டியிருக்கலாம். இந்ததாமதம் நோயாளிகளுக்கும், அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கும், எங்களது சிறுநீரகக் குழுக்களுக்கும் மன உளைச்சல் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் புதிய சிறுநீரகப் பிரிவு கட்டப்பட்டுவிட்டால், இதய நிபுணரும் நடைமுறைகளும் 24/7 நேரமும் அங்கு கிடைக்கும். ஏனெனில், அங்கு ஏற்கனவே சிறப்பு இதயநோய் வார்டு இருக்கிறது.

இது நிபுணரின் இந்த சிறப்புப் பராமரிப்பு தேவைப்படுகின்ற சிறுநீரக உள்நோயாளிகளுக்கான பாத்வேயை மேம்படுத்தும்.

முன்மொழியப்பட்ட பாத்வே



அனைத்து நிபுணத்துவமிக்க வல்லுநர் சேவைகளும் புதிய பிரிவில் கிடைக்கும்

நோயாளி சிகிச்சையை விரைவாகப் பெறுவார்

இடமாற்றங்கள் தேவைப்படாது

இதன் அர்த்தமானது மருத்துவமனையில் குறுகிய காலம் தங்குதல் மற்றும் நோயாளிகளுக்கு சிறந்த அனுபவம்

# உதாரணம் 2

## ஹீமோடயாலிசிஸ் வாஸ்குலார் அணுகல் சேவைகளுக்கான அணுகல்

சிறுநீரக நோயாளிகள் சில நேரங்களில் வாஸ்குலார் (இரத்த நாள) நிபுணர்களைப் பார்க்க வேண்டியிருக்கும்.


தற்போது, இந்த சிறப்பு வாஸ்குலார் நிபுணர்கள் செயின்ட் ஜார்ஜ் மற்றும் செயின்ட் ஹெலியரில் உள்ள நோயாளிகளுக்கு 24/7 நேரமும் கிடைப்பதில்லை. இது பாத்வேயின் வேகத்தைக் குறைத்து நோயாளிகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் மன அழுத்தத்தை அதிகரிக்கிறது.

புதிய யூனிட் உள்நோயாளிகள் மற்றும் பகல்நேரப் பராமரிப்பு நோயாளிகளுக்கான பாத்வேக்களை மேம்படுத்தும்.

உள்நோயாளிகளுக்கு, இந்த முன்மொழிவு 24/7 நேரமும் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கிடைப்பதை உறுதிசெய்கிறது. சிறுநீரக நோயாளிகளுக்கு வாரத்தின் எல்லா நாள்களிலும் அறுவைச் சிகிச்சை அரங்குகள் கிடைக்கும்.

பகல்நேரப் பராமரிப்பு நோயாளிகளுக்கு, ஒற்றைப் பிரிவுமிகத் திறமையாக இயங்கும். COVID காலத்தில் இரண்டு மருத்துவமனைகளும் தங்கள் பகல்நேர நோயாளிகளை ஒன்றாக நிர்வகித்தபோது இது பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட பாத்வே




சிறுநீரக நாள நிபுணர் புதிய பிரிவில் 24/7 நேரமும் இருப்பார்

அதிகப் படுக்கைகள் பகல்நேர நோயாளிகளுக்கான தாமதங்களை குறைக்கும்

சிறுநீரக நாள அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் அரங்குகள் வாரத்தில் ஏழு நாள்களிலும் கிடைக்கும்

நோயாளிகள் விரைவில் பார்க்கப்பட்டு விரைவாக வீடு திரும்புவார்கள்

# உதாரணம் 3

## வீட்டு டயாலிசிஸ் ஆதரவிற்கான அணுகல்

செயின்ட் ஹெலியர் மருத்துவமனையிலுள்ள உள்நோயாளிகளுக்கு பெரும்பாலும் ஒரு சிறப்பு மருத்துவரிடமிருந்து ஆலோசனை அல்லது பராமரிப்பு தேவைப்படுகிறது.

உதாரணமாக, அவர்கள் ஒரு இதய (கார்டியாக்) நிபுணரைப் பார்க்க வேண்டியிருக்கலாம். செயின்ட் ஹெலியர் சிறுநீரக யூனிட்டில் இதய நிபுணர் எல்லா நேரங்களிலும் இருப்பார். அதாவது, நோயாளி அதற்காக செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் படுக்கைக்காக காத்திருக்க வேண்டியதில்லை அல்லது அவரை அங்கு மாற்ற வேண்டியதில்லை. இதற்காக பல நாள்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம். அதன் பிறகு தங்களுடைய எஞ்சிய சிகிச்சையைத் தொடர்வதற்காக நோயாளி செயின்ட் ஹெலியர் மருத்துவமனைக்கு திரும்பவும் வரவேண்டியிருக்கலாம். இந்ததாமதம் நோயாளிகளுக்கும், அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கும், எங்களது சிறுநீரகக் குழுக்களுக்கும் மன உளைச்சல் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது.


செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் புதிய சிறுநீரகப் பிரிவு கட்டப்பட்டுவிட்டால், இதய நிபுணரும் நடைமுறைகளும் 24/7 நேரமும் அங்கு கிடைக்கும். ஏனெனில், அங்கு ஏற்கனவே சிறப்பு இதயநோய் வார்டு இருக்கிறது.

இது நிபுணரின் இந்த சிறப்புப் பராமரிப்பு தேவைப்படுகின்ற சிறுநீரக உள்நோயாளிகளுக்கான பாத்வேயை மேம்படுத்தும்.

**முன்மொழியப்பட்ட பாத்வே**




செயின்ட் ஜார்ஜில் இதய நிபுணர்கள் 24/7 இருக்கிறார்கள்



புதிய பிரிவில் சிறுநீரக நோயாளிகள் ஒரு நிபுனரை விரைவாக பார்ப்பார்கள்



இது எங்கள் நோயாளிகள், குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு சிறப்பானதாகும்

5

# புதிய பிரிவுக்கான பயணம்

பயணம் மற்றும் போக்குவரத்து என்பது பல நோயாளிகளுக்கும், அவர்களை கவனித்துக் கொள்பவர்களுக்கும் ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இந்த முன்மொழிவின் கீழ், தற்போது உள்நோயாளி பராமரிப்புக்காக செயின்ட் ஹெலியருக்கு பயணம் செய்யும் சில நோயாளிகளும் - மற்றும் 2026 ஆம் ஆண்டிலிருந்து சுட்டனுக்கு பயணம் செய்பவர்களும் - நீண்ட நேரம் பயணம் செய்வார்கள்.

எங்கள் முன்மொழிவின் கீழ், சிறுநீரக சேவைகளுக்கான வருகைகளுக்கு நமது நோயாளிகள் மேற்கொள்ளும் பெரும்பாலான பயணங்களில் எந்த மாற்றமும் இருக்காது. சிறிய எண்ணிக்கையிலான பயணங்களில் மட்டுமே மாற்றம் இருக்கும், ஆனால் புதிய பிரிவில் நோயாளிகள் சிறப்பான பராமரிப்பையும் அனுபவத்தையும் பெறுவார்கள். முன்மொழியப்பட்ட புதிய பிரிவுக்கு வருகை புரிகின்ற சில நோயாளிகளுக்கான சராசரி பயண நேரத்தை இந்த முன்மொழிவு அதிகரிக்கும். அனைத்து நோயாளிகளுக்கும், பயண நேரத்தில் ஏற்படும் சராசரி அதிகரிப்பு சுமார் எட்டு நிமிடங்களாக இருக்கும். நோயாளிகள் எங்கு வசிக்கிறார்கள் என்பதைப் பொருத்து இது மாறுபடும், சுட்டனிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிப்பவர்களுக்கு பயண நேரத்தில் பெருமளவு அதிகரிப்பு இருக்கும்.

சிறுநீரக நோயாளிகளுக்கு நோயாளி போக்குவரத்துச் சேவைகளுக்கான அணுகல் தொடர்ந்து கிடைக்கும்.

அஞ்சல் குறியீடுகளின் அடிப்படையில், பயணம் குறித்த அதிகத் தகவல்கள் இங்கு உள்ளது:
**www.swlondonccg.nhs.uk/important-documents**


இந்த முன்மொழிவு தொடர்பாக, பயணம் மற்றும் போக்குவரத்து உட்பட உங்களுக்கு இருக்கும் எந்த கவலைகளையும் பிரச்சனைகளையும் நாங்கள் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியமாகும்.

**உங்கள் கருத்துகளை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதைப் பற்றிய விவரங்களை இந்த சுருக்கத் தொகுப்பின் இறுதியில் காணலாம்.**


## செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் சிறுநீரகக் குழுக்கள் தங்கள் இந்த முன்மொழிவின் பலன்களை பின்வருமாறு தொகுத்தளிக்கின்றன:



c£80m முதலீடு



அதிக படுக்கைகள்



கூடுதல் அர்ப்பணிக்கப்பட்டஅரங்க அமர்வுகள்



நோயாளிகளுக்கு சிறந்த அனுபவம் மற்றும் விளைவுகள்



சிறந்த கட்டிடங்கள்



நிபுணர்களுக்கான சிறந்த அணுகல்

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறோம்

**உங்கள் கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் கவலைகளைத் தெரிவிப்பதற்கு பல வேறுபட்ட வழிகள் உள்ளன.**

1. எங்கள் வலைத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விப்பட்டியலை நிரப்பவும் **https://swlondonccg.nhs.uk/renal/** அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்க

2. எங்களைத் தொடர்புக்கொள்வதற்கான மின்னஞ்சல் முகவரி **swlRENAL@swlondon.nhs.uk**

3. Twitter இல் எங்களுடன் இணைந்து செயல்படுங்கள் **@SWLNHS**

4. எங்களைத் தொடர்புகொள்ள **FREEPOST improvingkidneycare**

**கூடுதல் தகவல்களுக்கு**
**https://swlondonccg.nhs.uk/renal/**

## பொது நிகழ்ச்சிகள்

நாங்கள் இணையம் வாயிலாக இரண்டு பொது நிகழ்ச்சிகள் நடத்துவோம் இந்த நிகழ்ச்சிகளுக்கான தேதிகளை எங்கள் வலைத்தளத்தில் பார்க்கலாம்

நீங்கள் இந்த ஆவணத்தை வேறொரு வடிவம் அல்லது மொழியில் பெற விரும்பினால், மின்னஞ்சல் அனுப்பவேண்டிய முகவரி: **swlRENAL@swlondon.nhs.uk**. பொருத்தமான வடிவம் அல்லது மொழியில் தகவல்களை வழங்க எங்களால் இயன்ற முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

-பின்வரும் தேதிக்குள் உங்கள் கருத்துகளை அறிந்துகொள்ள நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம்.
**செவ்வாய், செப்டம்பர் 7 2021**.

